ELECTORAL LITERACY CLUB

No Voter to be Left Behind

**இந்தியத் தேர்தல் ஆணையம்**

நிர்வாசன் சதன், அசோகா சாலை, புதுதில்லி
தொலைபேசி: 91–11–23052205
நிகரி: 91–11–23052219
www.eci.nic.in / www.ecisveep.nic.in

ELECTORAL LITERACY CLUB

No Voter to be Left Behind

**இந்தியத் தேர்தல் ஆணையம்**

# தேர்தல் கல்வியறிவுக் குழு

## கல்லூரிகளுக்கான வழிகாட்டிக் குறிப்புகள்



அமைப்பாளர்கள் குறிப்பு



ELECTORAL LITERACY CLUB

No Voter to be Left Behind

இந்தியத் தேர்தல் ஆணையம்

# தேர்தல் கல்வியறிவுக் குழு

## கல்லூரிகளுக்கான வழிகாட்டிக் குறிப்புகள்



ஒரு வாக்காளரும் விடுபட்டுவிடக் கூடாது

## தேர்தல் பள்ளிப் பாடல்

நாமனைவரும் இந்திய வாக்காளர்.
இந்நாடே எமது பெருமிதம்.
குடியாட்சி எமக்குப் பிடிக்குமே.
அனைவரின் பெருமை இதுவேதான்!.

வாக்கின் பெருமை உணர்வதே
முதற்கண் நமது கடமையாம்.
இதன்வலிமை, இதன் இயல்பு
நன்றாய் உணர்வோம் நாமெல்லாம்!

வாக்களிப்பது உரிமையே
நிர்ப்பந்தம் ஏதும் கிடையாது.
பதினெட்டு வயது எட்டியதும்,
பதிவேட்டில் பதிவது அவசியமே!

வாக்குச்சாவடி அலுவலரோ,
தேர்தல்நடத்தும் அலுவலரோ
படிவம் ஆறை (6) நிரப்பியே
புதிதாய் பெயரைச் சேர்த்திடுவோம்!

படிவம் 7ஐ நிரப்பியே
நீக்கம் செய்ய உதவிடுவோம்!
பெயரில் திருத்தம் செய்திடவே
படிவம் 8ஐ நிரப்பிடுவோம்!
முகவரி மாற்றம் ஒரேதொகுதிக்குள்
படிவம் 8Aவினை நிரப்பிடுவோம்!

தேர்தல் குறித்த தகவல்களை
தினமும் திரட்டிப் பெறுவோமே!
வாக்காளர் பட்டியலில்
நமக்கோர் இடத்தினைப் பெற்றிடுவோம்!
உற்றார் உறவினர் நண்பர்கள்
அனைவருக்கும் இதைஉணர்த்திடுவோம்.
(நாமனைவரும் இந்திய...........)

பேராசை ஏதும் கொள்ளாமல்,
மிரட்டலுக்கும் பணியாமல்,
நெஞ்சை நிமிர்த்திச் சொல்வோம் நாம்,
'விலைமதிப்பற்ற என் வாக்கு
விற்பனைக்கல்ல, விற்பனைக்கல்ல'.

அள்ளிக்கொடுக்கும் கொடைகளிலே
பாரதத்தின் பெருமைதனைப்
பாரெங்கும் பறைசாற்றும்
வாக்களித்தல் ஒன்றேதான்
நனிசிறந்த கொடையாகும்.
(நாமனைவரும் இந்திய ..........)

**பதிப்பு:**
**இந்தியத் தேர்தல் ஆணையம், நிர்வாசன் சதன், அசோகா சாலை, புதுதில்லி-110001**

இந்நூலில் இடம்பெற்றுள்ள பாடங்கள், படங்கள், விளக்கங்கள் ஆகியவற்றின் பதிப்புரிமை
இந்தியத் தேர்தல் ஆணையத்தைச் சார்ந்தது.

அமைப்பாளர்கள் குறிப்பு

30. **தேர்தல் நடத்தும் அலுவலர் (Returning Officer(RO)):-** தேர்தல் ஆணையம், மாநில அரசாங்கத்தின் ஒப்புதலுடன் சட்டமன்ற மற்றும் பாராளுமன்றத் தொகுதிகளுக்குத் தேர்தல் நடத்துவதற்காக நியமிக்கப்படும் மாநில அரசின் அலுவலர்.

31. **வாக்குரிமை (Suffrage) :-** தேர்தலில் வாக்களிக்கும் உரிமை.

32. **வயது வந்தோர் வாக்குரிமை (Universal Adult Franchise) :-** சாதி, மதம், நிறம், வகுப்பு அல்லது பாலினம், ஆகிய எவ்வித வேறுபாடுமின்றி 18 வயது நிரம்பிய அனைத்து மக்களுக்கும் வாக்களிக்க உரிமையுண்டு என்பதாகும்.

33. **வாக்காளர் பெயர் பதிவு (Voter Registration):-** தகுதி வாய்ந்த ஒருவர் அங்கீகரிக்கப்பட்ட வாக்காளராக வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்யும் நடைமுறை.

34. **வாக்களிப்பது (Voting):-** தேர்தலில் தனது விருப்பத்தை, தேர்வை வெளிக்கொணர்வது.

35. **வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி (Voter Verifiable Paper Audit Trail (VVPAT):-** வாக்காளர்கள் தாங்கள் செலுத்திய வாக்கு சரியான வேட்பாளருக்கு சென்றடைந்ததா என்பதை அறியவே இவ்வகை இயந்திரங்கள் உருவாக்கப்பட்டது. வாக்களித்தபின், அதாவது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் உள்ள நீல நிறப் பொத்தானை அழுத்தினால், வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவியில் ஒரு காகிதச் சீட்டு வரும். அச்சீட்டில் வேட்பாளரின் பெயர், சின்னம் மற்றும் பதிவு எண் பதிக்கப்பட்டிருக்கும். இந்த இயந்திரம் வாக்களித்தவர் மட்டுமே காணும் வகையில் கண்ணாடிப் பெட்டியில் காட்சிப் படுத்தப்பட்டிருக்கும். இச்சீட்டினை ஏழு வினாடிகள் மட்டுமே வாக்காளர் காண முடியும். பின்பு அச்சீட்டு அடைக்கப்பட்ட பெட்டியில் விழுந்துவிடும். தேர்தல் அதிகாரிகளால் மட்டுமே இவ்வகை இயந்திரங்களை செயல்படுத்த முடியும்.





## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | 5 |
| 2. | நோக்கங்கள் | 5 |
| 3. | உறுப்பினர்கள் | 6 |
| 4. | அமைப்பு முறை | 6 |
| 5. | ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer) & வழிகாட்டி | 6 |
| 6. | செயற்குழு | 7 |
| 7. | ஒருங்கிணைப்பாளர் (Convener) | 8 |
| 8. | பதவிக் காலம் | 8 |
| 9. | இடம் | 8 |
| 10. | தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அமர்வுகள் | 8 |
| 11. | செயல்பாடுகள் | 9 |
| 12. | சமூக ஊடகத்தின் வருகை மற்றும் தாக்கம் | 9 |
| 13. | கட்டாயமாகக் கடைபிடிக்க வேண்டிய விதிகள் | 9 |
| 14. | மாற்றுத் திறனாளி மாணவர்களையும் வாக்காளராகச் சேர்த்தல் | 10 |
| 15. | அறிவுரைகளுடன் கூடிய செயல்பாடுகள் | 11 |
| | (i) குடியரசுச் சுவர் (The Wall of Democracy) | 12 |
| | (ii) வாக்குப்பதிவு பிஸ்ட்ரோ(Bistro) / வாக்குப்பதிவு குறித்த திண்ணைப் பேச்சு அல்லது டீக்கடை பேச்சு | 15 |
| | (iii) இளம் வாக்காளர்கள் திருவிழா (Yuva Matdata Mahotsav) | 17 |
| | (iv) சிறப்புப் பணிகள் | 20 |
| | (v) விவாதம் / பேச்சுப் போட்டி | 21 |
| | (vi) தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டம் | 22 |
| | (vii) ஊக்குவிப்பாளர்களை அழைத்தல் (Motivators) | 23 |
| | (viii) கல்லூரி இதழில் சிறப்பு கதைகளைப் பதிப்பித்தல் | 23 |
| | (ix) சமூக ஊடகம் சார்ந்த நடவடிக்கைகள் | 24 |
| 16. | முன் மொழியப்பட்ட செயல்முறை அட்டவணை | 25 |
| 17. | தகவல் தொகுப்பு | 26 |
| 18. | சுருக்கம் மற்றும் சொல்விளக்கம் (Abbreviations and Glossary) | 27 |









அறிவிக்கப்பட்டவுடன், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் நடைபெறுவதற்காக இவ்விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படும்.

20. **இவர்களில் எவருமில்லை (None of the above** (NOTA)):- இந்தத் தெரிவு அக்டோபர் 2013-ல் அறிமுகப்படுத்தப்பட்டு அனைத்து மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் மற்றும் வாக்குச் சீட்டிலும் வெளியிடப்பட்டது. இதன் மூலம் யாருக்கும் வாக்களிக்க விருப்பமில்லாதவர்கள் சுயவிருப்பத்துடன், விதி மீறல்கள் எவையும் இன்றி முடிவெடுத்து வாக்களிக்க முடியும்.

21. **வேட்புமனு** (Nomination)-வேட்பாளர் தேர்தலில் போட்டியிடுவதற்காக விண்ணப்பிக்கும் படிவமே வேட்புமனு எனப்படும்.

22. **தேசிய வாக்காளர் தினம்** (National Voters' Day (NVD)) :- வாக்காளர்களை பெருமளவில் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், குறிப்பாக இளைஞர்களைப் பதிவு செய்யவும் இந்நாள் கொண்டாடப்படுகிறது. மேலும் இதன் மூலமாக, வாக்காளர் தங்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் இணைத்துக் கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

23. **தேசிய வாக்காளர் சேவை தகவு** (National Voters' Service Portal(NVSP)):- (www.nvsp.in) இந்தியத் தேர்தல் ஆணையத்தின்கீழ் செயல்படும் இணையதளம். இதன் மூலம் பொதுமக்களும், தேர்தல் அலுவலர்களும் வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்ளலாம்.

24. **பஞ்சாயத்து** (Panchayat)-இந்தியாவில் தற்போது பஞ்சாயத்து ராஜ் என்னும் ஆட்சி முறை உள்ளது. இதில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிராமப்பஞ்சாயத்து அடிப்படையாக உள்ளது. இது கிராமப் பஞ்சாயத்து (கிராம அளவில்), ஊராட்சி ஒன்றியம் (மண்டல அளவில்), மாவட்டப் பஞ்சாயத்து (மாவட்ட அளவில்) என மூன்று பிரிவுகளைக் கொண்டது.

25. **நேரடித் தேர்தல்** (Plebiscite) மிக முக்கியமாக பொதுநலன் சார்ந்த கேள்வி குறித்து தீர்வெடுக்கும் பொருட்டு வாக்காளர்களின் / மக்களின் நேரடி வாக்கினைப் பெறுதல்.

26. **வாக்குச் சாவடி** (Polling Station)-தேர்தல் நாளன்று வாக்காளர்கள் தங்களின் வாக்குகளைப் பதிவு செய்யும் பொருட்டு, ஒதுக்கப்பட்ட அறை / கூடம். இதனை வாக்குச்சாவடி என்பர்.

27. **வாக்குச்சாவடி தலைமை அலுவலர்** (Presiding Officer):- இவர் வாக்குப் பதிவு அலுவலர்களின் உதவியோடு வாக்குச்சாவடியில் வாக்குப் பதிவு தொடர்பான பணிகளை மேற்கொள்வார்.

28. **மாற்றுத் திறனாளிகள்** (Persons with Disability (PwDs)) :-தேர்தலின் போது உடல் உறுப்புகளில் ஏதேனும் குறைபாடுடைய நிலையில், சிறப்பு வசதிகள் தேவைப்படுவோர். இவர்களுக்கு தேர்தலின் போது சாய்வு தளம், தன்னார்வலர்கள், சக்கர நாற்காலி என அனைத்து வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

29. **பொது மக்கள் வாக்கெடுப்பு** (Referendum):- மக்களின் பிரதிநிதி யார் என்ற ஒற்றை அரசியல் கேள்விக்குரிய மக்களின் முடிவை நேரடியாகத் தெரிந்து கொள்வதற்கு நடத்தப்படும் தேர்தல்.

11. **தேர்தல்** (Election):– -அரசு நிர்வாகத்தினை வழிநடத்துவதற்காக ஒரு நபரை மக்கள் தேர்ந்தெடுக்கும் செயல்முறை / நடவடிக்கை.

12. **வாக்காளர்**(Elector):- வாக்காளர் பட்டியலில் இடம் பெற்று, தேர்தலின்போது வாக்குப் பதிவு செய்யத் தகுதி உடைய நபர்கள்.

13. **தேர்தல் நடைமுறைகளில் பங்கேற்றல் (Electoral participation)** :- ஒருவர் மக்களாட்சி வழியிலான அரசில் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளில் வாக்காளராக, தேர்தல் அலுவலராக, வேட்பாளராக, அரசியல் கட்சி அல்லது இன்ன பிற பங்காளராக ஈடுபடுதல்.

14. **தேர்தல் நடைமுறை (Electoral Process)**:-மக்களாட்சியில் தேர்தல் செயல்முறைகளின் ஒரு பகுதியாக வாக்காளர், தேர்தல் அலுவலர், வேட்பாளர், அரசியல் கட்சிகள் என அனைவரும் தேர்தல் பணிகளில் ஈடுபடுதல்.

15. **வாக்காளர் பெயர்ப் பட்டியல் (Electoral Roll)**:- பொதுவாக வாக்காளர் பட்டியல் என அழைக்கப்படுவது ஒரு தொகுதியில் உள்ள பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களை உள்ளடக்கிய பட்டியல் ஆகும். முறையான பராமரிப்பிற்காக ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியல் பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கும். ஒரு வாக்குப் பதிவு பகுதியில் உள்ள வாக்காளர்களின் விவரங்களை இப்பட்டியல் கொண்டிருக்கும்.

16. **வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை [Electors Photo Identity Card (EPIC)]:-** தனது தொகுதியின் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் பதிவு செய்தவர்களுக்கு வாக்காளர் பதிவு அலுவலரால் வழங்கப்படும் அடையாள அட்டை. இது தேர்தலில் வாக்களிப்பதற்கான ஆளறி அட்டையாகக் கருதப்படுகிறது.

17. **வாக்காளர் பதிவு அலுவலர்** [Electoral Registration Officer(ERO)] :- ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியல் திருத்தம் மற்றும் தயாரிப்பு தொடர்பான பணியினை மேற்கொள்வதற்காக இந்தியத் தேர்தல் ஆணையம் மாநில அரசுடன் இணைந்து ஓர் அரசு அலுவலரை நியமிக்கும். இவர் தனது தொகுதியின் வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கான சட்டபூர்வமான அதிகாரம் பெற்றவர்.

18. **மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம்** (Electronic Voting Machine):- இக்கருவி தேர்தலின் போது வாக்காளர் தனது வாக்கைப் பதிவு செய்யப் பயன்படுகிறது. இது கட்டுப்பாட்டுப் பகுதி (Control Unit) மற்றும் வாக்களிக்கும் பகுதி (Ballot Unit) என இரண்டு பகுதிகளைக் கொண்டது. இவை இரண்டும் ஐந்து மீட்டர் கம்பி வடம் மூலம் இணைக்கப்பட்டிருக்கும். வாக்குப் பதிவு அலுவலர் வாக்குச்சீட்டினை அளிப்பதற்குப் பதிலாக கட்டுப்பாட்டுப் பகுதி(Control Unit)யில் உள்ள பொத்தானை அழுத்துவார். இதன் பிறகே வாக்காளர் வாக்களிக்கும் பகுதி(Ballot Unit)யில் தான் வாக்களிக்க உள்ள வேட்பாளரையும் சின்னத்தையும் உள்ளடக்கிய நீல நிறப் பொத்தானை அழுத்தி வாக்களிக்க முடியும்.

19. **தேர்தல் நடத்தை விதிகள் (Model Code of Conduct)**:– தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களிடம் நடவடிக்கைகள் குறிப்பாக அரசியல் உரையாடல்கள், தேர்தல் நாள் மற்றும் வாக்குச்சாவடியில் அவர்களின் நடவடிக்கைகள், தேர்தல் அறிக்கைகள், ஊர்வலங்கள் குறித்தும் மற்றும் பிற நடத்தைகள் குறித்தும் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட வழிமுறைகள் ஆகும். இந்தியத் தேர்தல் ஆணையத்தால் தேர்தல் நாள்





## 1. முன்னுரை

அரசியல் சார்பற்ற, நடுநிலையான மற்றும் பாகுபாடற்ற முறையில், இந்தியக் குடிமக்களின் அனைத்து வயதினரும் உற்சாகத்துடன் பங்கேற்று, செய்முறைப்பயிற்சி அனுபவம் வாயிலாக தேர்தல் குறித்த அறிவைப் பெறும்பொருட்டு தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள், நம் நாட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கல்வியறிவு குழுக்கள், இந்தியா முழுவதிலும் அமைந்துள்ள கல்லூரிகளில் பயில்கின்ற மாணவர்கள் அதாவது புதிய வாக்காளர்களை குறிப்பாக 18 முதல் 21 வயது நிரம்பியவர்களை இலக்காகக் கொண்டு அமைக்கப்படுகின்றது.

தேர்தல் கல்வியறிவுக் குழு, கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டு செயல்படும். பின்வரும் பகுதிகளில், தேர்தல் கல்வியறிவுக் குழு எவ்வாறு அமைக்கப்படும், அக்குழுவில் பங்குபெறுபவராக, ஒருங்கிணைப்பாளராக இருப்பவர்கள் யார், அவை எங்கே, எப்படி நடத்தப்படும், எச்செயல்பாடுகள் இக்குழுவில் சேர்க்கப்படும் என்பவை குறித்து விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

## 2. நோக்கங்கள்

(i) மக்களுக்கு தேர்தல் குறித்த கல்வியறிவைப் புகட்டும் விதமாக, அதாவது வாக்காளராகப் பதிவுசெய்தல், தேர்தல் செயல்முறை மற்றும் தொடர்புடைய பொருண்மைகள் குறித்த செய்முறைப் பயிற்சியை அனுபவம் மிக்கவர்களின் வாயிலாகக் கற்பித்தல் ;

(ii) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (Electronic Voting Machine(EVM)) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவியைக் (Voter Verifiable Paper Audit Trail (VVPAT)) குறித்து பழக்கப்படுத்துதல் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் உறுதித்தன்மை, அதன் மீதான நம்பகத்தன்மை குறித்த விழிப்புணர்வூட்டல்;

(iii) தாம் அளிக்கவிருக்கும் வாக்குகளின் வலிமையைப் புரிந்துகொள்வதிலும், வாக்குரிமையை நம்பிக்கையுடனும், தனக்குகந்த வகையிலும், நேர்மையான முறையிலும் எவ்வாறு பயன்படுத்துவது என்னும் அடிப்படையில் இலக்கிடப்பட்ட மாணவர்களுக்கு, அதாவது வருங்கால வாக்காளர்களுக்கு உதவுதல்;

(iv) உறுப்பினர்களின் முழு ஆற்றலையும் பயன்படுத்தி, தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள் தேர்தல் குறித்த அறிவை மக்களிடம் கொண்டு செல்லுதல்;

(v) வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்யாத, தகுதியான உறுப்பினர்களை வாக்காளராகப் பதிவு செய்ய வகைசெய்தல்;

(vi) தேர்தல் குறித்த பணிகளில் தங்களின் பங்களிப்பை மேம்படுத்தவும், தெளிவான மற்றும் நேர்மையான வாக்களிப்பு என்னும் பண்பை அதிகரிக்கவும், 'ஒவ்வொரு வாக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது' மற்றும் ' ஒரு வாக்காளரும் விடுபட்டு விடக்கூடாது' என்னும் கொள்கையைப் பின்பற்றவும் பொதுமக்களுக்கு உதவுதல்.

### 3. உறுப்பினர்கள்

மாணவர்களே இக் குழுவில் உறுப்பினர்களாக இருப்பர். நடப்பு கல்வியாண்டின் தொடக்கத்தில் அவராகவே பதிவுசெய்து கொள்வதன் மூலம் அவர் இக்குழுவில் உறுப்பினராக இயலும். ஒரு முறை உறுப்பினராகப் பதிவு செய்யப்பெற்றவர் அவரது பட்டப்படிப்பு முடிந்து செல்லும் வரை உறுப்பினராகக் கருதப்படுவார்.

### 4. அமைப்பு

தேர்தல் கல்வியறிவுக் குழு, அக்கல்லூரி / கல்வி நிறுவனத்தின் பெயரிலேயே பெயரிடப்பட்டு, ஒருங்கிணைப்பு அலுவலரால் நிறுவப்பட வேண்டும். ஒரு கல்லூரிக்கு ஒரு தேர்தல் கல்வியறிவுக் குழு அமைக்கப்படவேண்டும். தேவை ஏற்படின், இவ்வழிகாட்டிக் கையேட்டின் அத்தியாயங்களை கல்லூரியின்/ பல்கலைக் கழகத்தின் வெவ்வேறு துறைகள் / பிரிவுகளுக்கு அறிமுகப்படுத்தலாம். மேலும் கல்வி நிறுவனம் தனது வசதிக்கேற்ப இத்தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் குறித்து முடிவெடுக்கலாம்.

### 5. ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer) & வழிகாட்டி

கல்லூரியின் வரலாறு /அரசியல் அறிவியல்( History / Political Science) துறையிலிருந்து ஒன்று அல்லது இரண்டு உதவிப் பேராசிரியர்கள் / பேராசிரியர்கள் இக்குழுவின் ஒருங்கிணைப்பு அலுவலர்களாக செயல்பட வேண்டும். மேலும் அவர்கள் அக்குழுவின் பயிற்றுவிப்பாளராகவும் செயல்பட வேண்டும். இதற்காக, தேர்தல் பணி அனுபவம் உடைய ஆசிரியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். அவர்கள் பின்வரும் பணி குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

(i) குழுவின் உறுப்பினராவதற்கு பெயர் பதிவு செய்தலை ஊக்குவித்தல் மற்றும் கண்காணித்தல்







## 18. சுருக்கம் மற்றும் சொல் விளக்கம்

1. **சட்டமன்றத் தொகுதி (Assembly Constituency):–** ஒவ்வொரு தொகுதியிலும் வாக்காளர் எண்ணிக்கை சமமான அளவில் அமையும்வண்ணம், தேர்தல் நடைபெறும் மாநிலம் பல்வேறு தொகுதிகளாகப் பிரிக்கப்படும்.

2. **வாக்குப்பதிவு** (Ballot):- வாக்குச்சீட்டு மூலம் இந்தியக் குடியரசுத் தலைவர் மற்றும் துணை குடியரசுத் தலைவர் தேர்தலில் இரகசிய வாக்களிப்பு முறை அல்லது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மூலம் பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத் தேர்தல்களில் வாக்களிக்கும் முறை.

3. **வாக்குப் பதிவுப் பெட்டி** (Ballot Box) :– வாக்காளர் தாம் வாக்களித்த வாக்குச்சீட்டினை செலுத்தும் முத்திரையிடப்பட்டு மூடப்பட்டுள்ள பெட்டி

4. **வாக்குச்சீட்டு (Ballot Paper):-** ஒரு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியல் அடங்கியுள்ள காகிதச் சீட்டு. இச்சீட்டில், வாக்காளர் தாம் விரும்பிய வேட்பாளரின் பெயரின் எதிரே ✓ குறியிட்டு அதனை வாக்குப்பதிவுப் பெட்டியில் இடுவர்.

5. **வாக்குச்சாவடி நிலை அலுவலர்** (Booth Level Officer(BLO))–மாநில அரசின் அலுவலரான இவர், தனது பகுதியின் வாக்காளராகவும் அப்பகுதியிலுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் நன்கு தெரிந்தவராகவும் இருப்பார். இவர் தனக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் உள்ள வாக்காளர்களின் விவரங்களைச் சேகரித்தல், சரி பார்த்தல் மற்றும் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் போன்ற பணிகளை வாக்காளர் பதிவு அலுவலரின் மேற்பார்வையில் செய்கிறார்.

6. **பரப்புரை** (Campaign)–அரசியல்வாதி அல்லது அரசியல் கட்சிகள் தங்களுக்கு வாக்களிக்க, மக்களிடம் செய்யும் முயற்சி.

7. **வேட்பாளர்** (Candidate)–தேர்தலில் போட்டியிடும் நபரே வேட்பாளர் எனப்படுவர்.

8. **தலைமைத் தேர்தல் அதிகாரி** (Chief Electoral Officer (CEO):– ஒரு மாநிலத்தில் நடைபெறும் தேர்தலையும், அதனையொட்டிய பணிகளையும் மேற்பார்வையிட, வழிநடத்த மற்றும் கட்டுப்படுத்துவதற்கு இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட ஓர் அரசு அதிகாரி. மேலும் இவர், ஒரு மாநிலத்தின் வாக்காளர் பட்டியல் தயாரிப்பு, புதுப்பித்தல் மற்றும் திருத்தம் செய்தல் போன்ற பணிகளையும் மேற்பார்வையிடுவார்.

9. **தொகுதி** (Constituency):– தொகுதி வாக்காளர்களால் சட்டமன்றத்திற்குப் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் பகுதியாகும்.

10. **மாவட்டத் தேர்தல் அலுவலர்** (District Election Officer(DEO)):– இந்தியத் தேர்தல் ஆணையம் ஒரு மாவட்ட நிர்வாகத்தின் தலைமையை (மாவட்ட ஆட்சியர், துணை ஆணையர் அல்லது மாவட்ட நீதிபதி) மாவட்டத் தேர்தல் அலுவலராக நியமிக்கிறது. மாநில தலைமைத் தேர்தல் அதிகாரியின் வழிகாட்டுதலுக்கு இணங்க, இவர் நாடாளுமன்றம், சட்டமன்றம் மற்றும் மேலவைத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் தயாரிப்பு மற்றும் திருத்தம் தொடர்பான பணிகளை தனது சட்ட அதிகாரத்திற்குட்பட்ட மாவட்டத்தில் மேற்கொள்வார். தேர்தல் காலங்களில் வாக்குச்சாவடிகளை அமைத்தல், வாக்குச்சாவடி பட்டியல்களை வெளியிடுதல் மற்றும் ஊழியர்களை நியமித்தல் போன்ற பணிகளையும் மேற்கொள்வார்.

## 17. தகவல் தொகுப்பு

1. தேர்தலில் நம்பிக்கை (Belief in Ballot)
2. ஜனநாயகத்தின் பாதுகாவலர் (Sentinels of Democracy)
3. அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் & சொற்களஞ்சியம் (FAQ & Glossary)
4. தேர்தல் நடத்தும் அலுவலருக்கான கையேடு (Handbook for Returning Officers)

   http://eci.nic.in/eci_main/ElectoralLaws/HandBooks/RO%20HANDBOOK_24022014.pdf.
5. www.nvsp.in.





(i) தேர்தல் கல்வியறிவுக் குழுவின் தேர்தலைக் கண்காணித்தல் மற்றும் நிர்வாகக் குழுவை ஏற்படுத்துதல்.

(iii) தேர்தல் கல்வியறிவுக் குழு மற்றும் மாவட்டத் தேர்தல் அதிகாரிக்குமிடையே குழு நடவடிக்கை தொடர்பான தகவல் தொகுப்புகள் மற்றும் தகவல் பரிமாற்றத்திற்கான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல்.

(iv) புதிய தகவல் தொகுப்பினை உருவாக்கி அதனை மாவட்டத் தேர்தல் அதிகாரிக்கு அனுப்பி வைத்தல்.

(v) நிர்வாகக் குழுவின் வாயிலாக அந்த ஆண்டுக்கான மாதாந்திர நடவடிக்கைப் பட்டியலைக் கண்காணித்து வழி நடத்துதல்.

**குறிப்பு:–** ஒருங்கிணைப்பு அலுவலர், தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகளில், செயற்குழு உறுப்பினர்களை ஈடுபடுத்துவார்.

## 6. செயற்குழு

I. ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவப் பிரதிநிதிகள் மற்றும் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினராக உள்ள மாணவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக அமைப்பால் இக்குழுக்கள் நடத்தப்படும்.

II. ஏற்கனவே வாக்காளராகப் பதிவு செய்த மாணவர்கள் மட்டுமே இந்நிர்வாகக் குழுவில் உறுப்பினராக முடியும்.

III. அரசியலில் ஈடுபாடுடைய மாணவர்கள் இந்நிர்வாகக் குழுவில் உறுப்பினராக இயலாது. எனினும் அவர்கள் இத்தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினராகலாம்.

IV. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் நிர்வாகக் குழுவினை அமைக்க வேண்டும்.

V. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தங்களுள் ஒருவரைத் தலைவராகவும் மற்றொருவரை துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

VI. ஒருங்கிணைப்பு அலுவலரின் ஆலோசனை, மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ், இந் நிர்வாகக் குழு, தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகள் நடைபெறுவதற்கு பொறுப்புடையவர்களாவர்.

VII. தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்களிடையே தேர்தல் நடைமுறைகளில் வாக்காளர் பங்கேற்பு குறித்த எண்ணத்தை உருவாக்குவதற்கான முயற்சியை இந்நிர்வாகக் குழு மேற்கொண்டு பின்வரும் பணிகளில் பங்கேற்க வேண்டும்.

   i. தேர்தல் கல்வியறிவுக் குழுவில் உறுப்பினர்களைச் சேர்க்க ஏற்பாடு செய்தல்

   ii. தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகளைத் திட்டமிடுதல் மற்றும் அந்த ஆண்டிற்கான மாதாந்திர நடவடிக்கைப் பட்டியலின் விவர அட்டவணை தயாரித்தல்

   iii. தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகளை எவ்விதத் தடையுமின்றி நடத்துவதற்காக வழிகாட்டி நெறிமுறைகளைக் கூடுதலாக உருவாக்குதல்.

iv. அட்டவணைப்படி செயல்பாடுகள் நடைபெறுவதைக் கண்காணித்தல்

v. தேர்தல் கல்வியறிவுக் குழுவின் தகவல் தொகுப்புகளை உருவாக்குதல்

vi. வாக்காளர்களாகப் பதிவு செய்யாத மாணவர்களின் பெயர்களைப் பதிவு செய்வதற்கு வகை செய்தல்.

## 7. ஒருங்கிணைப்பாளர் (Convener)

கல்லூரிகளில் வளாகத் தூதுவர்களாக நியமனம் செய்யப்பட்ட மாணவர்கள் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் / ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்படுவர். இவர்கள் ஒருங்கிணைப்பு அலுவலருக்கு தேர்தல் கல்வியறிவுக் குழுவின் பணிகளை மேற்கொள்ள உதவுவர். வளாகத் தூதுவர்/தூதுவர்கள் பதவியில் இல்லாத இடங்களில், ஒருங்கிணைப்பு அலுவலர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், விருப்பமுள்ள மாணவரை ஒருங்கிணைப்பாளராக நியமிக்கலாம். ஒருங்கிணைப்பாளர் பின்வருபவற்றிற்குப் பொறுப்புடையவர் ஆவார்:

i) மாணவ உறுப்பினர்களைக் கண்டறிந்து, தேர்தல் கல்வியறிவுக் குழுவின் பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடுத்துவது.

ii) செயற்குழு மற்றும் வழிகாட்டி(mentor) / ஒருங்கிணைப்பு அலுவலரின் வழிகாட்டுதலின் கீழ் அனைத்து செயல்பாடுகளையும் நடத்த வேண்டும்.

iii) செயற்குழு மற்றும் ஆலோசகர் / ஒருங்கிணைப்பு அலுவலரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட அனைத்துப் பணிகள்

## 8. பதவிக் காலம்

i) தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயற்குழு மற்றும் ஒருங்கிணைப்பாளர் / ஒருங்கிணைப்பாளர்கள் அவர்கள் பதவியேற்ற நாளிலிருந்து 1 முதல் 2 ஆண்டு காலம் வரை பதவி வகிப்பர். ஒருங்கிணைப்பு அலுவலரே பதவிக்காலம் குறித்த இறுதி முடிவினை எடுப்பார்.

ii) மாணவப் பிரதிநிதி தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினராகப் பதிவு செய்திருக்க வேண்டும்.

## 9. இடம்

தேர்தல் கல்வியறிவுக் குழு கூடுவதற்கான இடம், வகுப்புகள் முடிவடைந்த பின்னர் ஏதேனும் ஒரு வகுப்பறையில் அல்லது செயற்குழுவால் முடிவு செய்யப்பட்ட இடத்தில் இருக்கலாம். பல்வேறு செயல்பாடுகளுக்கு ஏற்றவாறு இடத்தை மாற்றம் செய்யலாம்.

## 10. தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அமர்வுகள்

தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அமர்வுகள் செயல்பாடுகளின் அடிப்படையில் இருக்க வேண்டும். நடப்பு கல்வியாண்டில் அவர்களுக்காக மொத்தம் 8 லிருந்து 10 மணிநேரம் வரை வகுப்புகள் ஒதுக்கப்படும். தேர்தல் கல்வியறிவுக் குழுவின் வகுப்புகள் கல்லூரியின் அனைத்து மாணவர்களுக்கும் பொதுவானதாகும்.





## 16. முன் மொழியப்பட்ட செயல்முறை அட்டவணை

| வ. எண் | செயல்பாடு | தற்காலிக கால வரையறை |
|---|---|---|
| | **முதல் பருவமுறை (Odd Semester)** | |
| 1 | தேர்தல் கல்வியறிவுக் குழுவின் புதிய நிர்வாக செயற்குழுவுக்கான தேர்தல் | ஜூலை |
| 2 | வாக்குப்பதிவு குறித்த உரையாடல் | |
| 3 | புதியவர்களுக்கான விவாதப் போட்டி | |
| 4 | இசைப் போட்டி | ஆகஸ்ட் |
| 5 | கவிதைப் போட்டி | |
| 6 | நாடகம் | |
| 7 | வாக்குப்பதிவு குறித்த உரையாடல் | செப்டம்பர் |
| 8 | செல்வாக்கு மிக்கவர்களை அழைத்தல் | |
| 9 | புகைப்படப் போட்டி | |
| 10 | ஓவியப் போட்டி | அக்டோபர் |
| 11 | ஊக்குவிப்பாளர்களை அழைத்தல் | |
| 12 | தேசிய வாக்காளர் தினத்திற்கான தயாரிப்புகள் | நவம்பர் |
| 13 | குறும்படத் தயாரிப்புப் போட்டிக்கான அறிவிப்பு | |
| 14 | சுவரிதழ் மற்றும் கல்லூரி இதழில் சிறப்பு கதை | வழக்கமான செயல்பாடு |
| | **இரண்டாம் பருவமுறை (Even Semester)** | |
| 15 | தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டம் | ஜனவரி |
| 16 | ஊக்குவிப்பாளர்களை அழைத்தல் | |
| 17 | படங்களைத் திரையிடல் | பிப்ரவரி |
| 18 | தலைமைத் தேர்தல் அதிகாரியின் வருகை | மார்ச் |
| 19 | வாக்குப்பதிவு குறித்த உரையாடல் | ஏப்ரல் |
| 20 | 18 வயது நிரம்பிய மாணவர்களின் வாக்காளர் பட்டியல் பெயர் பதிவு சிறப்புப் பணி | மே |
| 21 | சுவரிதழ் மற்றும் கல்லூரி இதழில் சிறப்பு கதை | வழக்கமான செயல்பாடு |

## வழக்கமான செயல்பாடு : சமூக ஊடகம் சார்ந்த நடவடிக்கைகள்

கல்லூரியில் செயல்படும் தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள், சமூக ஊடகங்களான முகநூல் (Face Book), கீச்சகம் (Twitter), படவரி (Instagram) போன்ற பலவகையான ஊடகங்களில் தனக்கென சொந்தமாகப் பயனர் பெயரைக் (handles/username) கொண்டிருத்தல் வேண்டும்.

வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பான தகவல்கள் பெருமளவிலான மக்களைச் சென்றடையும் வகையில், இச்சமூக ஊடகப் பக்கங்களில், அப்பொருண்மை தொடர்பான போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாக நடத்துதல் வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளில் சில:–

- சின்னம் வடிவமைத்தல் (Logo designing)
- பொன்மொழிகள்/ வசீகரமான அல்லது நளினமான வாக்கியங்களை எழுதுதல் (Tagline writing)
- சுவரொட்டி தயாரித்தல் (Poster making)
- வரைகலை பரிமாற்ற வடிவமைப்பு (GIF Making (Graphic Interchange Format)
- வலைப்பதிவில் எழுதுதல் (Blog writing)
- தேர்தல் அறிக்கை-தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்கள் தமது தொகுதியில் நடைபெற்ற தேர்தலின்போது அருகேயுள்ள வாக்குச்சாவடியில் பின்பற்றப்பட்ட நடைமுறைகளைக் குறித்த அறிக்கை ஒன்றினை காணொலியாகத் தயாரித்து தமது சமூக ஊடகப் பக்கங்களில் வெளியிடலாம்.





## 11. செயல்பாடுகள்

கல்லூரிகளுக்கான தேர்தல் கல்வியறிவுக் குழுவின் வழிகாட்டிப் புத்தகம் குழுவின் அனைத்து செயல்பாடுகளின் விவரங்களையும் கொண்டிருக்கும். செயற்குழு, "வாக்காளர் கல்வி" என்ற கருத்தினை மையமாகக் கொண்டு அதற்கு உகந்த வகையில் செயல்பாடுகளைத் திருத்தம் அல்லது புதிதாக உருவாக்கலாம். இவற்றுள் சுவர் பத்திரிக்கை என்ற நிகழ்ச்சி மாதத்திற்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டிய செயல்பாடுகளுள் அடங்கும். வாக்குப்பதிவு பிஸ்ட்ரோ (Ballot Bistro) மற்றும் சிறப்பு வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு நடைமுறையும் கட்டாயமான செயல்பாடுகளாகும்.

## 12. சமூக ஊடகத்தின் வருகை மற்றும் தாக்கம்

I. கல்லூரியில் செயல்படும் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயற்குழு, தங்களது செயல்பாடு தொடர்பான (1 ஆண்டு காலம்) நடத்தப்படுகிற நிகழ்ச்சிகளை ( நிகழ்ச்சி அறிவிப்புகள், புதுப்பிக்கப்பட்ட நிகழ்வுகள், முடிவுகள், முயற்சிகள், நடப்பு நிகழ்வுகள், இணைய வழி / இணைய வழியல்லா போட்டிகள், பட்டியல் பெயர் பதிவு நடைமுறைகள் முதலியன அனைத்தும் ) ஒருங்கிணைப்பு அலுவலர் / வழிகாட்டி (நிரந்தரம்) ஆகியோரால் அமைக்கப்பட்டு, நிர்வகிக்கப்படும் முகநூல் (Face Book) பக்கம், வலையொளி (You Tube) அலைவரிசைகளில் (நிகழ்ச்சிகளின் நேரடி ஒளிபரப்புகள், பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் மற்றும் தொடர்புடைய நிகழ்ச்சிகள்) ஒளிபரப்பப்பட வேண்டும்.

II. மேலும், கலந்துரையாடல் தொடர்பான பொருண்மைகளை முறையாக அதற்கென ஒதுக்கப்பட்ட பிண்டிரெஸ்டு (pinterest) போர்டுகள் மற்றும் படவரி (Instagram) விவரக் குறிப்புகளில் வெளியிடும் முறையினை செயற்குழு கண்காணிக்க வேண்டும். இணையதள மன்றங்களில் நிகழ்வுகள் ஏதேனும் பதிவிடும்போது, நிர்வாக அலுவலர்கள் அந்நிகழ்ச்சியின் சிறந்த தீர்ப்பு, முழுமையான நடுநிலைத்தன்மை, பகுத்தறியும் தன்மை ஆகியவற்றைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

III. கல்லூரி / பல்கலைக்கழக தேர்தல் கல்வியறிவுக் குழுக்களின் முகநூல் (Face Book) பக்கம், வலையொளி (You Tube) அலைவரிசைகளின் பக்கங்களை இந்தியத் தேர்தல் ஆணையத்தின் முகநூல் (Face Book) பக்கம், அங்கீகரிக்கப்பட்ட வலையொளி (You Tube) அலைவரிசைகளுடன் ஒருங்கிணைத்தல்.

**குறிப்பு:** கல்லூரி மற்றும் பல்கலைக்கழக தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள் ஏனைய இணைய தளம் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி அதிக அளவில் மக்களைச் சென்றடைவதற்கான வழிமுறைகளைப் பின்பற்றலாம். (இணையதளத்தில் பகிரப்படும் தகவல்கள் பாகுபாடின்றி இருப்பதை ஒருங்கிணைப்பு அலுவலர் உறுதி செய்ய வேண்டும்)

## 13. கட்டாயமாகக் கடைபிடிக்க வேண்டிய விதிகள்

I. தேர்தல் கல்வியறிவுக் குழு, யாதொரு அரசியல் கட்சியுடனோ அல்லது அரசியல் குழுக்களுடனோ தொடர்பு ஏதும் கொண்டிருக்கக்கூடாது.

II. இக்கல்வியறிவுக் குழு தொடர்பான செயல்பாடுகளில் (ஊக்குவிப்பாளர்களை அழைத்தல்,

சிறிய அளவிலான வாக்குப்பதிவு, ஏனைய கலாச்சார நடவடிக்கைகள்) பிரிவினை சக்திகள் ஈடுபட்டிருக்கக்கூடாது.

III. மாணவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் செயல்பாடுகளில் எவ்விதத் தடையுமின்றி பங்கேற்கலாம்.

IV. செயற்குழுவின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னர், குழுவின் நடவடிக்கை தொடர்பான ஆண்டறிக்கையை தயாரிப்பது அதன் கடமையாகும். நடத்தப்பட்ட நிகழ்வுகள் (இணையதளம் மற்றும் இணையதளம் அல்லாத), மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் அவ்வாண்டின் நடவடிக்கைகள் தொடர்பாக செய்யப்பட்ட பதிவுகள் ஆகியவற்றை ஆண்டறிக்கையில் விவரிக்க வேண்டும். இதனை ஒருங்கிணைப்பு அலுவலர் மூலமாக உரிய மாவட்டத் தேர்தல் அலுவலரிடம் அளிக்க வேண்டும்.

### 14. மாற்றுத் திறனாளி மாணவர்களையும் வாக்காளராகச் சேர்த்தல்:

தேர்தல் கல்வியறிவுக் குழுவில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களும் பங்கு பெற முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

- மாற்றுத் திறனாளி மாணவர்கள் இதில் பங்கேற்பதை ஊக்குவிக்கவும், பிற மாணவர்களை இது தொடர்பாக தெரிந்துகொள்ள ஊக்கப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- இக்குழு நடைபெறும் இடத்திற்குச் செல்ல அவர்களுக்கு ஏதுவாக வழிவகை செய்ய வேண்டும்.
- கேட்கும் குறைபாடு உள்ள மாணவர் இவ்வகுப்பில் கலந்துகொள்வார் எனில் சைகை மொழி பெயர்ப்பாளர் உடன் இருத்தல் வேண்டும் (அம்மொழி பெயர்ப்பாளர் மாணவரின் நண்பனாகவோ தெரிந்தவராகவோ இருக்கலாம்).
- இக்குழுவின்அனைத்து செயல்பாடுகளிலும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் விடுபட்டு விடா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- மாற்றுத் திறனாளி மாணவர்கள் குறிப்பிட்ட அளவில் இக்குழுக்களில் இடம் பெற்றிருக்க வேண்டும்.





## செயல்பாடு: ஊக்குவிப்பாளர்களை அழைத்தல்

இளைஞர் சார்ந்த பொருண்மைகள் குறித்தும், மக்களாட்சி, தேர்தல்கள், வயது வந்தோர் வாக்குரிமைகள், அரசியல் மற்றும் சமகால உலக அரசியல் சிக்கல்கள் குறித்தும் ஆய்ந்தறிவதற்கு கட்சி சார்பற்ற செல்வாக்குமிக்க நபர்கள், இளைஞர்களுக்கான முன்னோடிகள், சமூகத்தில் மாற்றத்தை உண்டு பண்ணக்கூடியவர்கள் போன்ற நபர்களை அழைத்து சாதாரணமான கூட்டங்கள் / அமர்வுகள் நடத்தப்பட வேண்டும். முதலாவதாக, தேர்தலில் இளைஞர்களின் அக்கறையின்மை தொடர்பான கலந்துரையாடல் மற்றும் உரையாடல்களைத் தொடங்கலாம். இந்நிகழ்ச்சியை இரு பிரிவுகளாகப் பிரித்து, முதலாவதாக தீர்மானிக்கப்பட்ட தலைப்பில் சிறப்புப் பேச்சாளர் உரையாற்றுதல், இரண்டாவதாக கூட்டத்தில் கலந்துகொண்டவர்களிடையே வினா–விடை வடிவில் கலந்துரையாடுதல் என நிகழ்ச்சியை நடத்தலாம். இந்நிகழ்ச்சியை தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்கள் பதிவு செய்தோ அல்லது நேரலையாகவோ சமூக ஊடகங்கள் வாயிலாகவோ ஒளிபரப்பலாம்.

**நடைமுறை:**

இந்நிகழ்ச்சியை ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகவோ அல்லது தேசிய வாக்காளர் தினத்தின் ஒரு பகுதியாகவோ அல்லது இளம் வாக்காளர்கள் திருவிழாவிலோ (MATDATA MAHOTSAV) சேர்ந்து நடத்தலாம்.

**கால அளவு:** 2 மணி நேரம்

## வழக்கமான செயல்பாடு: கல்லூரி இதழில் சிறப்பு கதைகளைப் பதிப்பித்தல்:

தேர்தல் கல்வியறிவுக் குழு, கல்லூரிப் பத்திரிக்கைப் பதிப்பாசிரியருடன் கலந்தாலோசித்து, "தேர்தல் ஜனநாயகத்தில் ஏன் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்" என்பது போன்ற தலைப்புகளில் பகிர்ந்து கொள்ளப்படும் கருத்தியல் நிகழ்வுகளை, சிறப்பு கதைகளைப் பத்திரிக்கையின் வருடாந்திர / மாதாந்திர / காலாண்டு பதிப்புகளில் வெளியிடலாம்.

இளம் மற்றும் வருங்கால வாக்காளர்களாகிய மாணவர்களிடையே தேர்தல் குறித்த புரிதல்களை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள கல்லூரிகளில் இருந்து சிறந்த கதைத்தொடர்களை உருவாக்கி அதனை 'வாக்குப்பதிவில் நம்பிக்கை' என்னும் தலைப்பில் தொகுக்கலாம்.

## செயல்பாடு : தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டம்

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 25ஆம் நாள் தேசிய வாக்காளர் தினம் கொண்டாடப்படுகின்றது. இத்தினமானது, வாக்குப்பதிவு செயல் முறையில் இளம் வாக்காளர்கள் அதிக அளவில் பங்கு கொள்வதை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டதாகும்.


தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்களாக, இந்நாளை அங்கீகரிப்பதும் முன்னிலைப்படுத்துவதும் முக்கியமானதாகும். எனவே கல்லூரிக்குள்ளேயே அனைத்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர் உறுப்பினர்களை அழைத்து, ஒரு சிறப்புக் கூட்டம் / விழாவை நடத்த வேண்டும்.

- மாணவர்கள், வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் பொருட்டு வளாகத்தை, சுவரொட்டிகள் மற்றும் ஏனைய கலைப்படைப்புகள் கொண்டு அலங்கரிப்பார்கள்.
- இந் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு மாவட்டத் தேர்தல் அலுவலர் அல்லது அவரது பிரதிநிதிகளைஅழைக்கலாம்.
- தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்கள், இவ்விழாவின் தொகுப்பாளர்களாக இருப்பார்கள். இந்நிகழ்வு முழுவதிலும், மாணவர்களால் நடத்தப்படும் மேடை நாடகம், குழுப் பாடல் / மேள வாத்திய நிகழ்ச்சி, நடன நிகழ்ச்சி மற்றும் பேச்சுப் போட்டி போன்ற கலை நிகழ்ச்சிகளுக்கு அவர்கள் திட்டமிட வேண்டும்.
- இச்சிறப்பு விழாவில், அடையாள வில்லைகள் (Badges), சட்டைகள், நூலறிகுறி (bookmarks) போன்ற விற்பனைப் பொருட்களை மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.
- தேர்தல் கல்வியறிவுக் குழு தொடர்பான வேலைகளை ஈடுபாடுடன் செய்த குழு உறுப்பினர்கள் மற்றும் இதர மாணவர்களின் தேர்தல் சார்ந்த பணிகள், தேசிய வாக்காளர் தினத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும்.
- இளம் வாக்காளர் திருவிழாவின் பங்கேற்பாளர்களையும் அழைத்து அவர்களுக்கும் இத்தினத்தில் பரிசுகள் வழங்கப்படும்.





## 15. அறிவுரைகளுடன் கூடிய செயல்பாடுகள்.



## செயல்பாடு : குடியரசுச் சுவர் (The Wall of Democracy)

சுவர் இதழ் ஒன்றை உருவாக்குவதற்கான சிந்தனையின் பின்னணி என்பது, தேர்தல் கல்வியறிவு குறித்த தகவல்களை உற்சாகமூட்டுவதாக, ஆக்கபூர்வமானதாக, அனைவரையும் ஈடுபடுத்தக் கூடியதாக, அனைத்து மாணவர்களையும் பங்கேற்கச் செய்யக் கூடியதாக உருவாக்கவும் பகிரவும் உருவானதாகும்.

இந்நோக்கத்திற்காக, கல்லூரியின் முக்கியமான பகுதியில் இருக்கும் சுவர் பயன்படுத்தப்படலாம். இது, 'குடியரசுச் சுவர்' என அழைக்கப்படும். தேர்தல் கல்வியறிவு தொடர்பான பல்வேறு கருத்துகளை அச்சுவரில் ஒட்டியோ அல்லது குண்டூசியால் குத்தியோ அல்லது அனுமதிக்கப்படும் நேர்வில் வரைந்தோ கூட காட்சிக்கு வைக்கலாம்.

அடையாளம் கண்டறியப்பட்ட கல்லூரி தாழ்வாரத்தில் சுவரின் ஒரு பகுதியையோ அல்லது காட்சிப் பலகையினையோ பயன்படுத்திக் கொள்வதற்கு கல்லூரி நிர்வாகம் அனுமதிக்க வேண்டும். சுவரிதழின் கருப்பொருள் ஒவ்வொரு மாதமும் மாற்றப்படக் கூடியதாக அமைய வேண்டும்.

### செய்முறை:

1. சுவர் இதழை செயற்குழுவால் வழிநடத்தப்படும் தேர்தல் கல்வியறிவுக் குழுவே நிர்வகிக்கும். சுவரிதழினை நிர்வகிக்க சில உறுப்பினர்களைக் கொண்ட குழு முதன்மை அணியாகச் செயல்படலாம்.
2. சுவரிதழின் மையக்கருத்து ஒவ்வொரு மாதமும் மாறிக்கொண்டே இருக்கும்.
3. நடைமுறையிலுள்ள தேர்தல் கல்வியறிவுக் குழு குறித்த கட்டுரைகள், கதைகள், கவிதைகள், வரைபடங்கள், ஓவியங்கள், கடிதங்கள், சொல் விளையாட்டுகள் போன்ற செயல்பாட்டுப் பங்களிப்பை சுவரிதழில் வெளியிட அனைத்து வகுப்பு மாணவர்களிடமும் கோர வேண்டும்.
4. மையக்கருத்தில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள், வாரந்தோறும் அல்லது இரு வாரங்களுக்கொரு முறை, மாணவப் பங்களிப்பின் அளவைப் பொறுத்து மாற்றப்பட வேண்டும்.
5. அந்த மாதத்தில் நடைபெற உள்ள முக்கியமான செயல்பாடுகள் குறித்த அறிவிப்புகளும் சுவரில் இடம்பெறும்.
6. சுவர் 4 முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட வேண்டும்.





## செயல்பாடு : விவாதம் / பேச்சுப்போட்டி

இளைஞர்களிடையே உரையாடுவதற்கான சிறந்த வழி விவாதம் மற்றும் கலந்துரையாடல்களேயாகும். தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்கள் ஏற்கனவே நடத்திய வாக்குப்பதிவு குறித்த திண்ணைப் பேச்சு என்ற நிகழ்ச்சியின் வாயிலாக தேர்தல் நடைமுறைகள் மற்றும் வாக்காளர் விழிப்புணர்வு குறித்த பொருண்மைகள் மீது போதிய அளவிலான அனுபவத்தைப் பெற்றிருப்பர். இவை தவிர கல்லூரிகளுக்கிடையேயான போட்டிகளை நடத்தி அவர்களின் கலந்துரையாடலை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்வர்.

### நடைமுறை:


- போட்டியின் தன்மை குறித்து, செயற்குழுவுடன் இணைந்து தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்கள் முடிவுசெய்வர். அவை நாடாளுமன்ற விவாதமாகவோ, சாதாரண விவாதமாகவோ, குழு விவாதமாகவோ அல்லது பேச்சுப் போட்டியாகவோ இருக்கலாம்.
- செயற்குழுவின் ஒப்புதலுடன் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்கள் அதற்கான கருப்பொருளை முடிவு செய்வர். வாக்குப்பதிவு குறித்த திண்ணைப் பேச்சு என்ற செயல்பாட்டில் உள்ள கருப்பொருள் பட்டியலை பேச்சுப் போட்டியின் தலைப்புகளுக்கு ஆதாரமாகக் கொள்ளலாம்.
- நகரத்திலுள்ள அனைத்து கல்லூரிகளும் அழைக்கப்படும். இந்நிகழ்வு, முறையாக விளம்பரப்படுத்தப்படும்.
- இரண்டு மணி நேர நிகழ்ச்சி நடத்தப்பட்டு, வெற்றி பெற்றோருக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை நடுவர்கள் மூலம் வழங்குவதுடன் நிகழ்ச்சி நிறைவடையும்.

**கால வரையறை :** ஒரு கல்வியாண்டின் இரண்டாம் பருவமுறை பாடத்திட்டத்தின்போது.

## செயல்பாடு: சிறப்புப் பணிகள்

இந்தியக் குடிமக்களாக உள்ள 18 வயதான அனைத்து கல்லூரி மாணவர்களும் வாக்களிக்கத் தகுதியானவர்கள் ஆவர். அவர்கள் அனைவரும் வாக்காளர்களாகப் பதிவு செய்வது மிக முக்கியமானதாகும். தேர்தல் கல்வியறிவுக் குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களும், தங்களை வாக்காளர்களாகப் பதிவு செய்ய வேண்டிய பொறுப்புடையவர்களாவர். மேலும், அவர்கள் வாக்காளர் பெயர் சேர்ப்புக்காக சிறப்பு முயற்சிகளையும் மேற்கொள்ளலாம்.

**நடைமுறை:**




- தேர்தல் கல்வியறிவுக் குழுவின் சிறப்புப் பணிகளின் நோக்கங்கள் குறித்தும் மேலும் அப்பணிகளை ஊக்குவிக்கும் பொருட்டும் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்கள் உரையாற்ற வேண்டும்.
- எவ்வாறு வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்வது (படிவம் 6–ஐ பூர்த்தி செய்வதன் மூலம்) மற்றும் அதற்குத் தேவைப்படும் பல்வேறு ஆவணங்கள் குறித்து பேசுவதற்கு கூட்டத் தொடர் ஒன்றை நடத்துவார்கள்.
- இக்குழுவின் உறுப்பினர்கள், அவர்கள் தொகுதியின் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களைத் [Booth Level Officer (BLO)] தொடர்பு கொண்டு, வாக்காளர் பட்டியலில் பதிவது குறித்து கல்லூரி மாணவர்களுடன் சிறப்புரையாற்றுமாறு கோர வேண்டும்.
- ஒரு குறிப்பிட்ட நாளைத் தேர்ந்தெடுத்து வாக்குச்சாவடி ஒன்றை அமைத்து, மாணவர்களிடையே படிவம் 6–ஐ வழங்கி, அதைப் பூர்த்தி செய்து வாக்குச் சாவடி நிலை அலுவலர்களிடம் வழங்க வேண்டும்.
- மற்ற நகரங்கள் மற்றும் மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு, தேசிய வாக்காளர் சேவை [National Voters Service Portal (NVSP)] இணைய தளம் : www.nvsp.in குறித்த விழிப்புணர்வை உருவாக்கி, தாங்களாகவே இணையதளத்தில் பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

**கால அளவு :** அரைநாள்

**கால வரையறை :** வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம் நடைபெறும் நேரத்தில் இந்நிகழ்வினை கல்லூரிகளில் நடத்தலாம்.



| | |
|---|---|
| **பிரிவு 1**<br>இதில் தேர்தல் தொடர்பான சொல் விளக்கம் மற்றும் மையக் கருத்துடன் தொடர்புடைய அடிப்படை தகவல்களை இந்தப் பகுதி கொண்டிருக்கும். | **பிரிவு 2**<br>தேர்தல் நடைமுறையின் பல்வேறு அம்சங்களைக் கொண்ட தற்போதைய மையக் கருத்து குறித்த மாணவர்களின் பங்களிப்பை இப்பகுதி கொண்டிருக்கும். இத்தகைய கதைகள் மாணவர்களால் உருவாக்கப்பட்டு விவரிக்கப் பட்டிருக்கும். மாறாக, "தேர்தலில் நம்பிக்கை" (Belief in the Ballot) என்ற புத்தகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மையக் கருத்து சார்ந்த தேர்தல் கதைகளை இப்பிரிவு கொண்டிருக்கும். |
| **பிரிவு 3**<br>இப்பகுதி 'நீங்கள் வாக்களிக்கத் தகுதியுள்ளவரா ?', 'நீங்கள் வாக்களிப்பதற்குத் தயாராக உள்ளீர்களா ? 'வாக்காளராக ஆவது எப்படி ?' போன்ற மையக் கருத்து தொடர்பான கேள்விகளுக்கு பார்வையாளர்களிடமிருந்து பதில்களைக் கோரும். இதே பகுதியில் பதிலளிப்பதற்காக மாணவர்களுக்கு இடமளிக்கப்பட வேண்டும். | **பிரிவு 4**<br>இந்தப் பிரிவு தேர்தல் கல்வியறிவுக் குழுவால் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய நடவடிக்கைகள் குறித்த அறிவிப்புகள் மற்றும் விளக்கங்களைக் கொண்டிருக்கும். பார்வையாளர்கள் அவர்களது கேள்விகளைப் பதிவு செய்வதற்காக இப்பிரிவின் ஒரு பகுதி வெற்றிடமாக விடப்படும். மாவட்ட தொடர்பு மையத்தின்(தேர்தல்) தொலைபேசி எண் தெளிவாக காட்சிப்படுத்தப்பட வேண்டும். |

**காலவரையறை:**

சுவர் இதழ் ஒவ்வொரு மாதமும் புதிய மையக்கருத்துடன் மேம்படுத்தப்பட வேண்டும். மாணவர்களுடைய பங்களிப்பின் அளவைப் பொறுத்து சுவரிதழின் பொருளடக்கங்கள், தினந்தோறும் அல்லது வாரந்தோறும் மாற்றப்படலாம்.

## சுவர் இதழுக்காக பரிந்துரைக்கப்பட்ட கருப்பொருள்கள்

சுவர் இதழுக்கான கருப்பொருளின் பட்டியல் பின்வருமாறு–

1. குடியரசு: மக்களின் அரசு, மக்களால், மக்களுக்காக.
2. எனது வாக்கு எனது உரிமை / வாக்கின் மதிப்பு
3. ஒவ்வொரு வாக்கும் சமமான மதிப்புடையது
4. நேர்மையான மற்றும் தெளிவான வாக்களிப்பு
5. தேர்தல் நடத்தை விதிகள்
6. வாக்களிப்பின் இரகசியம் காத்தல்
7. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (Electronic Voting Machine(EVM)) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவியை (Voter Verifiable Paper Audit Trail (VVPAT)) உபயோகிப்பதன் நம்பகத் தன்மை.
8. உங்கள் வேட்பாளரைத் தெரிந்து கொள்ளுங்கள்
9. தேசிய வாக்காளர் தினம்
10. தேர்தல் அறிக்கைகள்
11. தேர்தலுக்கு முந்தைய மற்றும் பிந்தைய கருத்துக் கணிப்பு
12. சமூக ஊடகம் மற்றும் கட்சிப் பரப்புரை
13. தேர்தல் சார்ந்த பிற தகவல்கள்





## நடனம் / இசைப் போட்டிகள்:

அந்தந்த கல்லூரியின் நடனம் மற்றும் இசைச் சங்கத்துடன் சேர்ந்து இப்போட்டிகள் நடத்தப்படும். இந்நிகழ்ச்சிகளின் மூலமாக தேர்தல் மற்றும் நடைமுறைகள் சார்ந்த கதையைக் கூறுவதற்காக, மேலும் இளைஞர்களை வாக்களிக்க ஊக்குவிக்கும் வகையிலான பாடல்களை இசைப்பதற்காக பங்கேற்பாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும்.

மாறாக, தேர்தல் கல்வியறிவுக் குழு உறுப்பினர்கள் மேற்சொன்ன செயல்களைத் தனியாகத் தேர்வு செய்து, கல்வியாண்டின் எந்நேரத்திலும், அப்போட்டிகளைத் தனியாக நடத்த ஏற்பாடு செய்யலாம்.

## பாடல் பாடும் போட்டிகள்

கல்லூரி / பல்கலைக்கழகத்தின் இலக்கிய மன்றம் அல்லது இசைச் சங்கத்துடன் இணைந்து இப்போட்டிகள் நடத்தப்படும். கல்லூரிகளுக்கிடையேயான / கல்லூரி ராப் போட்டிகள் மற்றும் பாடல் பாடும் போட்டிகள், இளைஞர்களை பங்கேற்க வைப்பதற்காக தற்போது நடப்பிலுள்ள முயற்சியாகக் கருதப்படுகிறது. இதன் மூலமாக பிரதிநிதித்துவம், இளைஞர்கள் மாற்றத்திற்கான முகவர்கள்(Youth as Change Agents), மக்களாட்சி, தேர்தல், அரசியல், வாக்குரிமை, பிரதிநிதிகளைத் தேர்வு செய்தல் போன்ற கருத்துகளை முன்னிலைப்படுத்தலாம்.

மாணவர்களிடையே, கலந்துரையாடுவதற்காக அத்தகைய போட்டிகளைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் தேர்தல் கல்வியறிவுக் குழு நடத்தலாம்.

வெற்றியாளரை முடிவு செய்வதற்காக, ஒரு சிறப்பு நடுவர் குழுவை அழைக்கலாம் அல்லது பிரபலமான வாக்களிப்பு முறையினைப் பின்பற்றலாம்.

## தேர்தல் வினாடி வினா

மாணவர்களிடையே, தேர்தல் மற்றும் தேர்தல் நடைமுறை குறித்த வினாடி வினா நிகழ்ச்சியினை நடத்தலாம்.

## வாக்காளர் உறுதிமொழி :

இத் திருவிழாவில் பங்கேற்ற அனைத்து இளம் வாக்காளர்களையும் ஒரிடத்தில் கூடச்செய்து வாக்காளர் உறுதிமொழியினை எடுக்க வேண்டும். தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்கள் இவ்வுறுதிமொழியினை சமூக ஊடகத்தில் வெளியிடலாம்.

### நாடகங்கள் / வீதி நாடகங்கள் / சாலையோரக் காட்சிகள்

கல்லூரி / பல்கலைக்கழக நாடகவியல் சங்கத்துடன் இணைந்து இப்போட்டிகள் நடத்தப்படுவதுடன் Mood-Indigo, Antaragni, OASIS, Malhar, Rendezvous, Shahitya, Legacy, ECSTASY, Kuruksastra போன்ற முக்கிய இளைஞர் திருநாட்களில் நடத்தப்படுகின்றன.

### நிழற்படப் போட்டிகள், திரைப்படங்கள் திரையிடுதல் மற்றும் குறும்படத் தயாரிப்புப் போட்டிகள்:

கல்லூரி / பல்கலைக்கழக நிழற்படச் சங்கம் மற்றும் திரைப்பட சங்கத்துடன் இணைந்து இப்போட்டிகள் நடத்தப்படும். இப்போட்டியில் திரையிடப்படும் திரைப்படங்கள், ஆவணப்படங்கள் மற்றும் நிழற்படங்கள் தேர்தல் தொடர்பான வலுவான கருத்துகளை எடுத்துரைத்து, தேர்தல் நடைமுறைகள், தேர்தல்கள், மக்களாட்சி, குடிமக்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து பார்வையாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஆர்வத்தினை உருவாக்கவும் உதவும். இது அவர்களை ஈர்க்கக்கூடிய கருவிகளாக அமையும். இவற்றை திறம்பட பயன்படுத்தினால், மக்களின் தேர்தல் பங்கேற்பிலும் மாற்றத்தைக் கொண்டுவர உதவும்.

குறும்படம் தயாரிக்கும் போட்டி மற்றும் புகைப்பட போட்டியின் பொருண்மைகள்/ கருப்பொருட்கள் குறித்து கல்லூரி/பல்கலைக்கழகத்தின் மாணவர்களுடன் கலந்தாலோசித்து தேர்தல் கல்வியறிவுக் குழுவால் முன்னதாகவே அறிவிக்கப்படும். இதுபோன்று, கல்வி நிறுவனத்தின் அனைத்து மாணவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில், திரையிடப்படவேண்டிய திரைப்படங்களின் பட்டியல் தேர்ந்தெடுக்கப்படலாம். திரையிடப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர் செயல், ஆய்வு மற்றும் பகுப்பாய்வு பகுதி போன்றவற்றை ஏற்பாடு செய்யலாம்.








## செயல்பாடு: வாக்குப்பதிவு பிஸ்ட்ரோ(Ballot Bistro) / வாக்குப்பதிவு குறித்த திண்ணைப்பேச்சு அல்லது டீக்கடை பெஞ்சு விவாதம்

பண்டைய கலாச்சாரமான டீக்கடை போன்ற செலவு குறைந்த உணவகங்களில் நடைபெறும் விவாதத்தை மீண்டும் கொண்டு வரும் வகையில், கல்லூரி, சிற்றுண்டிகள் மற்றும் தேநீர் விடுதிகளில் தேர்தல் கல்வியறிவுக் குழு உறுப்பினர்களால் தேர்தல் குறித்த தலைப்புகள் குறிப்பாக தேர்தல் நடைமுறைகளில் இளைஞர்களைச் சேர்த்தல், அவர்களை பங்கு பெறச் செய்தல் மற்றும் அதில் அவர்களை ஈடுபடுத்துதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய பொருண்மைகள் குறித்து விவாதம் மற்றும் புதிய கருத்துகளை உருவாக்குகிற கூட்டங்களை இத்திண்ணைப் பேச்சு / டீக்கடை பெஞ்சு விவாதத்தில் (வாக்குப்பதிவு குறித்த உரையாடல்) கண்டிப்பாக இடம் பெற்றிருக்கும்.



**பங்கேற்பாளர்கள்:–** வாக்குப்பதிவு குறித்த விவாதம், அனைத்துத் தேர்தல் கல்வியறிவுக் குழு உறுப்பினர்களுக்கான கட்டாய செயல்முறையாகும். இக்குழுவின் உறுப்பினரல்லாதவர்கள் கூட இக்கூட்டங்களில் கலந்துகொள்ளலாம்.

**செயல்முறை:–** அந்நாளின் தீர்மானத்தை அறிவித்த பின்னர், அங்குள்ள அனைவரும், தலைப்பு குறித்த அவர்களது கருத்துகள், விருப்பங்கள், நிலைப்பாடு மற்றும் எண்ணத்தை கூற முன்வருவதற்கான வாய்ப்பு வழங்கப்படும். இவை, முறைசாரா தன்மையுடையனவாக இருந்தாலும், வாக்குப்பதிவு குறித்த விவாதத்தில் பங்கேற்பாளர்கள் முனைப்புடன் கலந்து கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றனர்.

ஆங்கிலம் மற்றும் வட்டார மொழி ஆகிய இரண்டு மொழிகளையும் கலந்து கூட்டங்கள் நடத்தப்படுகின்றன என்பதை தேர்தல் கல்வியறிவுக் குழு உறுதி செய்ய வேண்டும்.

இந்நிகழ்ச்சிகள், பெருமளவிலான மக்களிடத்தில் சென்றடைய வேண்டுமென்பதற்காக, இக்குழுவின் உறுப்பினர்கள் இதனைப் பதிவு செய்து, சமுதாய ஊடகங்களில் நேரடியாக ஒளிபரப்பலாம்.

**கால அளவு:** 2 மணி நேரம்

**சாத்தியமான கருப்பொருட்கள்:** தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்கள், சொந்தமாகவோ, பின்வரும் பட்டியலைக் குறிப்பிட்டோ வாக்குப்பதிவு குறித்த விவாதத்திற்கான கருப்பொருளை முடிவு செய்யலாம்.

- வாக்காளர் கல்வி: அவசியமான தேவை
- வாக்களிப்பது அரசால் கட்டாயமாக்கப்பட வேண்டும்
- எது இந்தியாவை வாக்களிக்க வைக்கும் / எவ்வாறு இந்தியாவை வாக்களிக்க வைக்கலாம் ?
- தேர்தல்களில் பங்கேற்றல் / தேர்தல் பங்களிப்பு
- இணைய வழியில் வாக்களித்தல்: இதன்மூலம் பல சிக்கலான பிரச்சனைகள் ஏற்படுவதற்கு வகைசெய்தல் அல்லது அதனைத் தொடங்கி வைத்தல்.
- கடுமையான குற்றங்களில் குற்றஞ்சாட்டப்பட்ட வேட்பாளர்கள் தேர்தல்களில் போட்டியிடுவதிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவார்களா ?
- கருத்துக் கணிப்புகள் மற்றும் வாக்குப்பதிவுக்குப் பின்னர் எடுக்கப்படும் ஆய்வுகள் தடை செய்யப்பட்டு முறைப்படுத்தப்பட வேண்டும்
- மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (Electronic Voting Machine(EVM)) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி (Voter Verifiable Paper Audit Trail (VVPAT)) குறித்த விழிப்புணர்வு
- உங்களுக்கு தேவையற்றதைக் குறித்து அறிந்துகொள்ளுதல் : நோட்டா



## செயல்பாடு: இளம் வாக்காளர்கள் திருவிழா (Young Voter's festival or Yuva matdata Mahotsav)

இத்திருவிழா, ஒவ்வொரு கல்வியாண்டின் முதல் அரை வருடத்தில், ஓரிரு நாட்களுக்கு தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்களால் நடத்தப்படும் நிகழ்ச்சியாகும். மாணவர்கள் அவர்கள் விருப்பதிற்கேற்ப, அனைத்து கல்லூரிகளையும் ஒன்றிணைத்தோ அல்லது அவர்களது கல்லூரி மாணவர்களுக்கென தனியாகவோ இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துகொள்ளலாம். வரிசையாக நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் இத்திருவிழாவானது அனைத்து கல்லூரி சங்கங்களின் உறுப்பினர்களை ஒன்று திரட்டுவதற்கான நிகழ்வாகும். நிகழ்ச்சிகள் குறித்த சில பரிந்துரைகள் வருமாறு:–

### ஓவியப் போட்டிகள்:

கல்லூரி அல்லது பல்கலைக் கழக தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள் இளைஞர்களிடையே தேர்தல்கள், தேர்தல் நடைமுறைகள், வாக்களித்தல், குடியாட்சி மற்றும் பொதுவான அரசியல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஒரு சாதனமாக, சுவரோவியங்கள்,



சுவரொட்டிகள், மரச்செதுக்கு ஓவியங்கள் / கல்லச்சுக்கலை போட்டிகள் உட்பட, பல போட்டிகளை, கல்லூரிகளுக்கிடையேயான அல்லது கல்லூரியிலுள்ள வகுப்புகள் மட்டும் பங்குபெறும் கலைப் போட்டிகளாக நடத்தலாம்.